**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோத்தகிரி</u>**

**<u>O.S. No. 39/2024</u>**

**2026 –ம் வருடம் ஜுன் திங்கள் 11ம் நாள் வியாழக்கிழமை வாதி சாட்சி PW1 ஆக நிலை 3 பெஞ்ச் கிளர்க் திருமதி. M. கிருத்திகா என்பவரால் சத்தியபிரமாணம் செய்து விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**திரு. விஜயராஜ் த/பெ. லிங்கன் வயது. 49 ஊர். புடியங்கி**

**-----------------------------------------------------------------------**

**வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>PW1 குறுக்கு விசாரணை 04.15 P.M.</u>**

1. என்னுடைய தாத்தா மாதாகவுடருக்கு மொத்தம் 4 ஆண் பிள்ளைகள் என்று சொன்னால் சரிதான். அவர்களில் யார் யார் உயிருடன் உள்ளார்கள், யார் யார் இறந்துவிட்டார்கள் என்றால் அஜ்ஜன் மட்டும் உயிருடன் இருக்கிறார். மற்றவர்கள் இறந்துவிட்டார்கள். இறந்துபோன எனது சித்தப்பாக்களின் வாரிசுகளையும் மற்றும் எனது அத்தைமார்களின் வாரிசுகளையும் இந்த வழக்கின் தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால் சேர்த்துள்ளேன். இந்த வழக்கின் முதல் வாதி என் அம்மா என்றால் சரிதான். என்னைவிட எனது அம்மாவிற்கு இந்த வழக்கின் விவரங்கள் தெரியும் என்று சொன்னால் சொத்து பிரிக்கும்போது எனக்கு நன்றாக தெரியும், எனக்கும் அனைத்து விவரங்களும் தெரியும்.

2. எங்களுக்குள் ஏற்கனவே பாகம் பிரித்துக்கொண்டோம் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தை மட்டும் பிரித்துக்கொள்ளவில்லை. மேற்கண்ட விவரத்தை வழக்கில் கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை.

இந்த வழக்கை நான் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகப் பிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ளேன். ஏற்கனவே எங்களுக்கு சம்பந்தப்பட்ட 1 ஏக்கர் பூமி இல்லாமல் வேறு 2 ஏக்கர் சேர்த்து 3 ஏக்கருக்கு ஆவணம் 4ம் பிரதிவாதி விஜயலட்சுமி தயார் செய்துள்ளார். எனக்கு ஒதுக்கப்பட்ட 1 ஏக்கர் பூமி எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்த இந்த வழக்கில் 4ம் பிரதிவாதி ஏற்கனவே எங்களுக்கு பாத்தியப்பட்ட ஒரு ஏக்கர் பூமியை தனது பெயரில் ஆவணம் செய்து கொண்டதால் இந்த பூமியில் எங்களுக்கு பாகம் இருக்கிறது என்று எனது வழக்கில் சொல்லவில்லை.

3. 14.08.2005ல் எனது தாத்தா இறந்துவிட்டார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் இறப்புச் சான்றிதழ் என் தாத்தா மாதன் என்பவருடையதுதான் என்றால் சரிதான். **இந்த இறப்புச் சான்றிதழ் பி.வா.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது தாத்தாவிற்கு எந்தெந்த புல எண்களில் எவ்வளவு விஷ்தீரனம் உள்ளது என்றால் அதைப் பற்றி தெரியாது. இந்த வழக்கின் புல எண் மற்றும் விஷ்தீரனம் எவ்வளவு என்றால் 1 ஏக்கர் 26 சென்ட்டிற்காக போட்டுள்ளேன். 1 ஏக்கர் 29 ½ சென்ட்டிற்கான சர்வே எண் என்னவென்றால் தெரியாது. 1 ஏக்கர் 29 ½ சென்ட் எத்தனை துண்டுகளாக உள்ளது என்றால் 3 துண்டுகளாக உள்ளது. மேற்கண்ட 3 துண்டுகளும் வெவ்வேறு இடத்தில் உள்ளது என்றால் சரிதான். வெவ்வேறு இடத்தில் இருப்பதால் அந்த 3 துண்டுகளுக்கான செக்குப் பந்தி வெவ்வேறாக இருக்கும் என்றால் சரிதான்.

4. என்னிடம் காட்டப்படும் செக்குப் பந்தியில் புல எண். 248/18,

252/13, 256/13 ஆகியவற்றிற்கு ஒரே செக்குப் பந்தி காட்டியுள்ளது தவறு என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 12.07.1993ம் வருடத்தின் பாகப்பிரிவினை பத்திரத்தில் 1ம் சாட்சியாக காணப்படும் கையெழுத்து என்னுடையததான். **இந்த பாகப்பிரிவினை பத்திரம் பி.வா.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** (**பதிவு செய்யப்படவில்லை என்பதால் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது**) எனது தாத்தாவும் அவரது வாரிசுகளும் பாகம் பிரித்துக்கொண்ட பத்திரத்தில்தான் நான் ஒரு சாட்சியாக கையொப்பம் இட்டுள்ளேன். பி.வா.த.சா.ஆ.2 ல் எனது தாத்தாவிற்கு சொந்தமான அனைத்து சொத்துகளை பொறுத்து பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

5. என்னிடம் காட்டப்படும் 03.11.1978 தேதியிட்டு என் தாத்தா கிரையம் பெற்ற பத்திரம் என்று சொன்னால் சரிதான். **அந்த கிரையப் பத்திரம் பி.வா.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பி.வா.த.சா.ஆ.3ல் கண்ட தாவா சொத்தையும் சேர்த்துதான் பாகப்பிரிவினை பத்திரம் பி.வா.த.சா.2ல் பாகம் பிரிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 1978ம் ஆண்டு என் தாத்தா கிரையம் பெற்ற 1 ஏக்கர் 29 ½ சென்ட் பூமியையும் சேர்த்து 1993ம் வருடம் எனது தாத்தாவும் மற்ற வாரிசுகளும் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்ற விவரத்தை எனது வழக்கில் நான் சொல்லவில்லை.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the defendant / defendant's Counsel and admitted by the witness to be correct.**

**G. Amirdham, 11.06.2026**
**District Munsif,**
**Kotagiri.**